பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 09 2026 SUNDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவர்களின் திறனை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. உலகின் மூன்றாவது மிகப்பெரிய புத்தொழில் சூழல் அமைப்பைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

3. வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் நான்கு நாள் அரசுமுறை பயணமாக சௌதி அரேபியா சென்றுள்ளார்.

4. ரஷ்யா-யுக்ரைன் இடையே மூன்று நாள் போர் நிறுத்தத்திற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

கல்வியைக் கற்றுக்கொள்வதற்கும், வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கும் உதவிடும் ஆசிரியர்கள் மிக உயர்ந்த மரியாதைக்குரியவர்களாகக் கருதப்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினத்தையொட்டி அவர் எழுதியுள்ள கட்டுரையில், மாணவர்களிடையே சுதந்திரமான சிந்தனையை ஊக்குவித்தல், அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல், கேள்விகள் கேட்கும் மனப்பான்மையை வளர்த்தல், விவாதிக்கும் மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை கற்பித்தல் பணியின் மிகவும் பயனுள்ள அம்சங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்பித்தல் பணி ஆசிரியர்களின் பொறுப்பு என்பதுடன், தங்களது செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் மூலம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

மாணவர்களின் திறனை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரியம், மரபுகளின் சிறப்பை மதித்து, மனிதகுலத்தின் நலனுக்காக உழைக்கும் வகையில் மாணவர் தலைமுறைகளை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உலகளவில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழலில், விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

கொள்கை முடிவெடுப்பதில் இருந்த தேக்க நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசின் மீதான விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில், பொருளாதாரம் சார்ந்த தரவுகளை அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

மின்சாரம், மொபைல் ஃபோன் உற்பத்தி, வாகன விற்பனை அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

எஃகு, சிமெண்ட் பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக கட்டுமானம், வீட்டுவசதி மற்றும் வர்த்தக செயல்பாடுகள் முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பாதுகாப்புத் தளவாட உற்பத்தி 2 லட்சம் கோடி ரூபாய் என்ற வரலாற்றுச் சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

தலைமுறை தலைமுறையாக மாணவர்களுக்குக் கல்வி கற்கவும், திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஸ்ரீ ராம் வணிகவியல் கல்லூரி வாய்ப்பளித்துள்ளதாக அவர் கூறினார்.

கலை முதல் அரசியல் வரை அனைத்துத் துறைகளிலும் இந்த கலோரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் முத்திரைப் பதித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த மற்றும் சுயசார்பு கொண்ட நாடாக உருவெடுக்கும் செய்யும் வகையில், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கல்வியமைச்சர் திரு பிரஹலாத் ஜோஷி, கல்வித் துறையில் பல ஆண்டுகளாக உயர் தரநிலையை இந்தக் கல்லூரி பேணிப் பாதுகாத்து வருவதற்கு பாராட்டுத் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்தியா இன்று உலகின் மூன்றாவது மிகப்பெரிய புத்தொழில் சூழல் அமைப்பைக் கொண்ட நாடாகத் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேசச் சந்தையில் திறன் வாய்ந்த மனிதவளத்திற்கான தேவை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனை இளைஞர்களுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று திரு.பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<>>>>>

மஹாராஷ்டிரா மாநிலம் மும்பை வடக்குப் பகுதியில் திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள காந்திவலியில் இரண்டாவது திறன் மேம்பாட்டு மையத்தை இன்று தொடங்கி வைத்துப் பேசினார்.

நிறுவனங்கள் மற்றும் தொழில் சங்கங்களுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சஞ்சய் காந்தி தேசிய பூங்காவை முழுமையாக அழகுபடுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், கடலோரச் சாலைத் திட்டம் மும்பை வடக்குப் பகுதியின் தோற்றத்தை மாற்றியமைக்கும் என்றும் திரு பியூஸ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அந்தமான் - நிக்கோபார் தீவுகளின் துணைநிலை ஆளுநராக பிஜேபி மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் தினேஷ் சர்மா நியமிக்கப்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் மாளிகை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இதற்கான நியமன ஆணையை குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மாநிலங்களவை பதவிக்காலம் வரும் நவம்பர் 25-ம் தேதியுடன் முடிவடைகிறது.

மாநிலங்களவையின் துணைத் தலைவராக பணியாற்றி வரும் இவர், உத்தரப் பிரதேச மாநிலத்தின் துணை முதலமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

<<<<<>>>>>

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் நான்கு நாள் அரசுமுறை பயணமாக சௌதி அரேபியா சென்றுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவரது இந்தப் பயணத்தின் போது அந்நாட்டு மனிதவளம் மேம்பாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அமைச்சர்களை சந்தித்து பேச்சு நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியை மீண்டும் ரஷ்யா தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக, அந்நாட்டு அதிபர் மாளிகையில், அமெரிக்கத் தூதர்கள் திரு ஸ்டீவ் விட்காஃப் மற்றும் திரு ஜாரெட் குஷ்னர் ஆகியோருடன் திரு விளாடிமிர் புடின் பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து, இவ்விரு நாடுகளின் தலைவர்களும் தலைநகரங்கள் மீதான தாக்குதல்களை 72 மணி நேரத்திற்கு நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டனர்.

மேலும், அமைதி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அமெரிக்கத் தூதர்கள், இன்று யுக்ரைன் தலைநகர் கீவ் நகருக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<<>>>>>

ராஜஸ்தான், தில்லி, மும்பை உள்ளிட்ட 8 மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் வெளியிட்டுள்ள பதிவில், உச்ச நீதிமன்றக் கொலீஜியம் அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில், இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நேபாளத்தில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு ருவதாக அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு நவீன் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ளப் பதிவில், இந்தியா - நேபாள நாடுகளின் மீட்புக் குழுக்கள், நேபாளத்தில் உள்ள சிலிமே சுரங்கத்தில் உள்ள இடிபாடுகள், நீர், சேற்றை அகற்றும் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

மீட்புப் பணிகளை எளிதாக்கும் வகையில், அருகிலுள்ள சியாஃப்ருபேசியிலிருந்து சுரங்கப்பாதை நுழைவாயில் வரை சாலை அமைக்கும் பணியும் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடினமான நிலப்பரப்பு மற்றும் குறுகிய பள்ளத்தாக்கு காரணமாக, கனரக ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவது சாத்தியமில்லை என்று திரு. ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஆகஸ்ட் 26 வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட இணைப்பை மீட்டெடுக்கும் நடவடிக்கையாக, தேவிகாட் பகுதியில் ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது.

<<<<<>>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள சீதாபுரா தேர்வு மையத்தில் ஏற்பட்ட மின்தடை காரணமாக, கடந்த மாதம் 30-ம் தேதி நடைபெற்ற முதுநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வை எழுத முடியாமல் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நேற்று நீட் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டது.

மருத்துவப் படிப்பிற்கான தேசியத் தேர்வுகள் வாரியத்தால் இந்த நுழைவுத் தேர்வு ஜெய்ப்பூரில் உள்ள ஐந்து தேர்வு மையங்களில் பாதுகாப்பான, நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெற்றது.

இந்தத் தேர்வை, பாதிக்கப்பட்ட 2,445 மாணவர்கள் எழுதியதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-16, 18-21, 21-11 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Azriyn - Tan இணையை வென்றது.

<<<<<>>>>>

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 18 புள்ளி ஒரு ஓவரில் 55 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

56 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்தியா, 8 புள்ளி 4 ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 57 ரன் எடுத்தது.

<<<<<>>>>>